RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s210

# திருப்பாவை உணர்த்தும் திருவருட்நெறிகள்

**மா. கோபி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# Tiruppavai Unarttum Tiruvarutnerikal

**M. Gopi** [a, *]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, Namakkal- 638182, Tamil Nadu, India

* Corresponding Author:
gobiphd18@yahoo.co.in

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

As the man appeared in the world, the native speakers of Tamil language originated. Humans worship God on religious grounds they went further. God divided worship according to the land were. Vegetarian and Vaishnavas are two of the greatest religions in Tamil Nadu Both were terrifying. Worship and worship Thirumala as the God of Vaishnava Maui. In the book Nallaira Divya Prabandham sung by twelve persons Four thousand songs highlight the glory of Perumal. Andalus contributes to the Lord in the order of the subordinates Thiruppavai has sung the script for surrender. Awakened in the thread thirty passions of love to the Lord and to the Lord Sung to surrender. Not just during the dawn of dawn she also mourned the women of the Archdiocese Invites. If the women observe the fasting of the month it is about three months it is raining and the country is thriving. Their life Have a good husband. Everybody lives and lives should. We use 'Namo Narayana' with her tongue as we pronounce daily, the evil that comes upon us is in the fire burned ashes. Those who surrender to Tirumala for fasting. The body must regret and follow the rules regularly. Women should not eat ghee and beautify themselves. Do as much charity as possible for others. He also sang as a child of universal integrity. Andal, all fasting bearers are clean, fasting with purity in the Lord is easy to surrender. Not just his country and his people Andal Thiruppavai Various benefits of fasting through the sense of community.

**Keywords:** Tiruppavai, Perumal, Nallaira Divya Prabandham, Namo Narayana.

## முன்னுரை

தமிழகத்திற்கு பல்லவர்களது வருகையே பக்தி இலக்கியம் தோன்ற முதற்காரணமாயிற்று. தமிழகம் முழுவதும் ஏராளமான கோயில்கள் உருவாகின. மக்களுடைய மனதில் இறைநெறியைப் புகுத்தவேண்டும் என்பதற்காகவே சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சமயம் என்பதற்கு பக்தி, இறைநெறி, இறைக் கொள்கை என்ற பல பெயர்கள் உண்டு. தமிழ்மொழியினைப் பக்தியின் மொழி என்றும், இரக்கத்தின் மொழி என்றும் கூறியவர் மறைத்திரு தனிநாயகம் அடிகள். கி.பி.7,8,9-ம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் பேரலையாக தென்னாட்டிலும், வடநாட்டிலும் பரவியது.

சமயங்கள் பல தோன்றினும் இருபெரும் சமயங்களாக ஓங்கி வளர்ந்தது சைவமும், வைணவமும் ஆகும். சைவ சமயம் பன்னிரு திருமுறைகள் என்ற பெயரில் நாயன்மார்களால் தோற்றுவிக்கப்பட்டு சிவாலயங்களில் ஓதப்பட்டன. வைணவ நூல்கள் பன்னிரு ஆழ்வார்கள் மூலமாக

நாலாயிரதிவ்யப்பிரபந்தம் என்ற பெயரில் வைணவ நெறிகளாக பெருமாள் கோவில்களில் இறைவனுக்கு பாடப்பட்டன. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் நாதமுனி என்பவர் நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்ற பெயரில் நான்காயிரம் பாடல்களைத் தொகுத்தார். பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள் இறைவனைச் சரணடைவதற்காக நோன்பு குறித்த இறைநெறியைப் பக்தி பாசுரங்களாக மார்கழி மாதத்தில் நோன்பு இருத்தல், திருமாலின் தோற்றம், இறைவழிபாட்டில் மெய்த்தூய்மையும், மனத்தூய்மையும் வேண்டும் எனவும், பாவை நோன்புக்குரிய விதிகளைப் பெண்கள் கடைபிடித்தல், நோன்பினால் ஏற்படும் பயன் குறித்த செய்திகளைத் திருப்பாவை நூலில் பாடலாக பாடியுள்ளார்.

## ஆண்டாள்

கலியுகத்தில் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் இறைவனுக்கு மலர்மாலை கட்டித் தருவதற்காக அமைக்கப்பட்ட நந்தவனத்தில் துளசி மலரில் கி.பி.9-ம் நூற்றாண்டில் நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறையில் சதுர்த்தசி திதியில் செவ்வாய்க் கிழமையன்று பூர நட்சத்திரத்தில் பூமிப்பிராட்டியார் அம்சமாய்ப் பெண் குழந்தை வடிவில் தோன்றியது. அங்ஙனம் அவதரித்த அப்பெண் குழவியை நந்தவனத்தில் பார்த்த பெரியாழ்வார் பெருங்களிப்பு கொண்டு தமது மகளாகப் பாவித்து குழந்தைக்கு கோதை எனப் பெயரிட்டு எடுத்து வளர்க்க ஆரம்பித்தார். இறைவனுக்காக பெரியாழ்வார் தொடுக்கும் மாலையைத் தினந்தோறும் தான் சூடிய பிறகு இறைவனுக்கு கொண்டு சேர்த்த காரணத்தால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும், கோதை மனவளப் பிராட்டி என்றும், இறைவனுக்கு மனைவியானதால் நாச்சியார் என்றும், ஆண்டவனை ஆண்டதால் ஆண்டாள் என்றும் அழைக்கப்பட்டனர். ஆண்டாள் பாடிய திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் முப்பது பாசுரங்களைக் கொண்டதாகும். திருப்பாவை நூல் காலத்தால் முற்பட்டதாக கருதப்படுகிறது.

## திருப்பாவை

ஆண்டாள் அருளிய திருப்பாவை முப்பது பாசுரங்களை உடையதாகும். இவற்றுள் முதல்ஐந்து பாசுரங்களில் 'பாவை நோன்பு' பற்றிய பொதுவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. 6 முதல் 15 வரை உள்ள பாசுரங்கள் ஆண்டாள் தோழி மார்களைத் துயில் எழுப்புதல் பற்றி அமைந்தவையாகும். 16 முதல் 29 வரையிலான பாசுரங்கள் துயிலெழுந்த கோபியர்கள், கண்ணணையும் தம்முடன் நீராட அழைத்துச் செல்ல எண்ணி அவனது திருமாளிகைக்குச் சென்று அவனைத் துயிலுணர்த்தும் செய்தியைக் கூறுகின்றது. இறுதியில் உள்ள 30வது பாடல் திருப்பாவைப் படிப்பவர்களுக்கு ஏற்படும் பலன் குறித்து பேசுகிறது.

## இறைவழிபாடு

இறைவழிபாடு என்பது மனித மனத்துள் நிகழும் பல்வேறு மாற்றங்களை உள்ளடக்கியதாகும். மனதை அலைபாயவிடாமல் தடுத்து ஒருநிலைப்படுத்தி ஆழ்நிலையில் இறைவனை நினைத்து வழிபாட்டைத் தொடங்க வேண்டும். இறைவழிபாட்டிற்கு தமிழ்ச் சமயம் பலநெறிகளை வலியுறுத்தினாலும், வழிபடுபவர்களின் மன இயல்புகளே பெரும்பாலும் இவற்றைத் தீர்மானிக்கின்றன. “இறைவனை வழிபடுவோர் தத்தம் மனத்திற்கிசைந்த யாதாவதொரு வடிவில் தம்முடைய அறிவுக்கேற்ப முறையில் மெய்யன்போடு வழிபட்டால் அவ்வடிவில் நின்று இறைவன் அருள்புரிகின்றார் என்பது தக்க சமயக் கருத்தாகும்" என்ற கா.சு. பிள்ளை கருத்து சிந்திக்கத்தக்கதாகும். வழிபாட்டின் போது மெய்யன்போடு வழிபட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் (Pillai, 2011).

## இறைவழிபாட்டில் திருமால்

வைணவ சமயநெறிகளுள் திருமாலை முதற்கடவுளாகவும், இறைவனது நெறியே தலைசிறந்த நெறியாகக் கொண்டு வைணவ சமயத்தினர் திருமாலை வழிபட்டனர். திருமால் வழிபாடு

வேதகாலத்திற்கு முந்தியதாகும். தமிழகத்தில் திருமால் வழிபாடு பழங்காலம் முதற்கொண்டே இருந்தமைக்கு நிலப்பாகுபாடு சான்றாகும். தொல்காப்பியர் முல்லை நிலத்திற்குரிய கடவுள் வழிபாட்டைப் பாடல் மூலமாக கூறியுள்ளார்.

"மாயோன் மேய காடுறை உலகமும்"

மாயோன் என்பதற்கு கரியவன் எனப் பொருள்படும். காடும், காடும் சார்ந்த நிலப்பகுதியை முல்லை நிலமாக பிரித்துள்ளார். அத்தகைய நிலப்பகுதிக்குரிய மக்களாகிய இடையர்கள் திருமாலை வழிபட்டு வந்த காரணத்தால், முல்லை நிலக்கடவுளாக திருமால் குறிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது (Tholkappiyar, 2000).

## நோன்பு

நோன்பு என்பது பெண்கள் மேற்கொள்வது, ஏதேனும் ஒரு காரணம் கருதி மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தி இறைவனையே சிந்தித்து, தான் எண்ணியது ஈடேற விரதத்தைக் கடைபிடிப்பது நோன்பு ஆகும். நோன்பு குறித்து வள்ளுவர்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தலும்

ஈண்டு முயலப் படும்"

விரும்பிய பயனை விரும்பியவாறே அடைய முடியுமானால் செய்கின்ற தவம் இந்நிலையிலும் முயன்று செய்யப்படும் என்று நோன்பு குறித்து விளக்கமளித்துள்ளார் (Manikanar, 2006).

## மார்கழி நோன்பு

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம் என்பது ஆன்றோர் வாக்கு. காரணம் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில் குறிப்பிட்டிருப்பதைக் காணமுடிகிறது. மார்கழி மாதத்தில் அதிகாலை நேரத்தில் இறைவனைத் தொழுவதால் அருளைப் பெற்று பிறவிப் பெருங்கடலைக் கடந்து இறைவனது திருவடியைச் சேரலாம் என்பது மக்களிடையே நம்பிக்கையாக உள்ளது.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீர்

ஆடப் போதுவீர் போதுமினோ! நேரிழையீர்

சீர் மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்கள்"

பௌர்ணமி நாளன்று பரிபூரணமாக பிரகாசிக்கின்ற சந்திரனின் ஒளியுடன் இறைவனின் திருவொளியைத் தரிசிப்பது சிறப்பாகும் (Ramasubramaniyam, 2005). ஆண்டாள் திருப்பாவையில் பௌர்ணமி தினத்தன்று நோன்பு துவங்க உள்ளதாக பாடல்வரிகள் புலப்படுத்துகிறது. நீராடல் என்பது சங்ககாலந் தொட்டு தமிழ்ப் பெண்கள் போற்றி வரும் நோன்புகளில் ஒன்றாக உள்ளது. அதனால் கண்ணனையே நினைத்துக் கொண்டு வாழ்ந்து வரும் ஆண்டாள் பரந்தாமனே தனக்கு மணவாளன் என்று கூறியதோடு அப்பெருமானின் திருவடியை அடைய மார்கழி மாதத்தில் பாவை நோன்பினை மேற்கொண்டாள். யான் பெற்ற இன்பம் பெறுக வையகம் என்பது போல தான் மட்டுமல்லாது தன்னுடைய தோழிகளான ஆயர்கன்னிகளையும் புனித நீராடி நோன்பு இருப்பதற்காக ஆண்டாள் அழைக்கின்றார்.

மார்கழியில் விடியற்காலையில் எழுந்து புனித நீராடி முறைப்படி யாரெல்லாம் தன் கடமைகளைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு தன்னையே அர்ப்பனிப்பேன் என்று இறைவனே கூறுவதாக பாகவதத்தில் கருத்து இடம்பெற்றுள்ளதை அனைவரும் அறியலாம்.

பெண்கள் இவ்வாறு வழிபடுவதன் பலனாக நாடெல்லாம் மழை பெய்ய வேண்டும். எங்கும் வளம் பெருக வேண்டும். எல்லோரும் இன்பமாய் வாழ வேண்டும். தங்களுக்கு ஏற்ற கணவர் அமைய

வேண்டும் என்று இறைவனை வழிபாடு செய்தமையை நோக்கும் பொழுது ஆண்டாள் மேற்கொண்ட பாவை நோன்பு சமுதாய நோக்கு உடையதாக திகழ்ந்தமை அறியமுடிகிறது.

## திருமால் தோற்றம்

திருமால் 108 திவ்ய தேசங்களையும், 10 அவதாரங்களையும் கொண்டு விளங்குகின்றார். பகைவரைத் தாங்கி கொல்லக்கூடிய கொடுமையான தொழிலை உடைய நந்த கோபாலின் மகன் ஆவார்.

“கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோ பன் குமரன்

ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்

கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான்

நாராயணனே நமக்கே பறை தருவான்

பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்”

கூரிய வேல் ஏந்தி கொடிய தொழில் புரியும் நந்த கோபாலின் மகன் என்பார் (Ramasubramaniyam, 2005). அழகு பொருந்திய கண்களை உடைய யசோதையின் இளஞ்சிங்கம் போன்றவனும், கரிய திருமேனியையும், சிவந்த கண்களை உடையவனும், சூரியனையும், சந்திரனையும் போன்ற திருமுகத்தைக் கொண்டவனுமாகிய நாராயணனே, நோன்பிற்கு வேண்டிய பறையைக் கொடுப்பான் என்று ஆண்டாள் தம் நூலான திருப்பாவையில் பாடியுள்ளார்.

## இறைவழிபாட்டில் மெய்த்தூய்மையும், மனத்தூய்மையும்

இறைவனை வழிபடுவதற்கு மெய்த் தூய்மையும், மனத்தூய்மையும் இன்றியமையாததாகும்.

“தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க

போய பிழையும் புகுதருவான் நின்றனவும்

தீயினில் தூசாகும்: செப்பு ஏலோர் எம்பாவாய்”

நோன்பு இருப்பவர்கள் மட்டுமல்லாது, இறைவனை வழிபடக் கூடியவர்கள் அனைவருமே புனித நீராடி தூய்மையோடு அப்பரமனை மலர்கள் கொண்டு அருச்சனை செய்ய வேண்டும். வாயார பாடி மனத்தினால் நன்கு சிந்தனை செய்து வழிபட்டால் நமக்குத் துன்பம் தரும் பாவங்கள் நீங்கிவிடும். வரஇருக்கும் பாவங்களும் நெருப்பில் எரிந்து தூசு போன்று அழியும். அதனால் ஒவ்வொருவருமே மனத்தூய்மையோடு பரமனுடைய திருநாமங்களை நாவினால் உச்சரிக்கவேண்டும் என்று ஆண்டாள் பாடுகின்றார் (Ramasubramaniyam, 2005).

## பாவை நோன்புக்குரிய விதிகள்

ஆண்டாள் ஆயர்குலப் பெண்களைத் துயிலெலுப்பி நோன்புக்காக நீராட அழைத்துச் செல்கிறார். நோன்புக்காக கடைபிடிக்க வேண்டிய கடமைகளைப் பாடல் மூலமாக எடுத்துரைக்கின்றார்.

“வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்

பையத் துயின்ற பரமன் அடிபாடி

நெய்யுண்ணோம், பால் உண்ணோம் நாட்காலே நீராடி

மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்

செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்"

உலகத்தில் இனிது வாழக்கூடிய மக்களே, பாவை நோன்புக்கு நாம் கடைபிடிக்க வேண்டிய செயல்முறைகளைக் கூறுகின்றேன் கேட்பீராக திருப்பாற்கடலிலே யோக நித்திரை புரியும் பரந்தாமனது திருவடிகளை வணங்க வேண்டும். நெய்யும், பாலும் அருந்தக் கூடாது. விடியற்காலையிலே குளிக்கவேண்டும். கண்களுக்கு அழகூட்டும் மையை இட்டுக் கொள்ளக் கூடாது. கூந்தலில் பூச்சூடிக் கொள்ளக் கூடாது. தீய செயல்களை ஒரு போதும் செய்யக் கூடாது. கோள் போன்ற குறைகளைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும், யோகிகளுக்கும், தவசிகளுக்கும் தாமாகவே முன் சென்று தர்மம் செய்தல் வேண்டும். வீடு தேடி வரும் சந்நியாசிகளுக்கு பிரம்மச்சாரிகளுக்கு பிச்சையும் இயன்றளவு அளிக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் விருப்புடன் செய்வதே நாம் செய்யும் அறநெறியாகும். இத்தகைய நோன்பைக் கடைபிடியுங்கள் உள்ளம் மகிழ்வடையும் என்று திருப்பாவை மூலமாக வலியுறுத்துகின்றார் (Ramasubramaniyam, 2005).

## நோன்பின் பயன்

நோன்பு இருக்கும் பழக்கம் பழங்காலந்தொட்டே மக்களிடம் இருந்து வருகிறது. நினைக்கும் காரியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக பயன் கருதியே பெண்கள் நோன்பைக் கடைபிடிக்கின்றனர். நோன்பு நோற்போர் முதலில் நீராடி உடல் தூய்மை செய்த பின்னரே பிற பூசனைச் செயல்களில் ஈடுபட வேண்டும்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து

ஓங்கு பெரும் செந்நெல் ஊடு கயல் உகள

பூங்குவளைப் போதில் பொறி வண்டு காண்படுப்ப

தேங்காதே புக்கருந்து சீர்த்த முலை பற்றி

வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"

ஆயர்குலச் சிறுமியர்களே, பாவை நோன்புக்காக வாமனாவதாரத்தில் திருவிக்கிரமனாக ஓங்கி உயர்ந்து உலகத்தை மூன்று அடிகளால் அளந்த உத்தமனான திருமாலின் நாமங்களைப் பாடி நீராடினோமானால், நமக்கு தீமைகள் குறைந்து மாதம் மூன்றுமுறை மழை நாடெங்கிலும் பொழியும். செந்நெல் ஓங்கிப் பருத்து வளரும், பயிர்களின் நெருக்கம் மிகுந்த காரணத்தால் மீன்கள் துள்ளிக் குதிக்கும். அழகிய குவளை மலர்களில் வரிகளை உடைய வண்டுகள் தேனைக் குடித்த மயக்கத்தில் உறங்கிக் கிடக்கும். வள்ளல்களைப் போன்ற பெரிய பசுக்கள் கறக்கும் வரை பால்சுரந்து குடங்களை நிரப்பும். இத்தகைய வளங்கள் நாட்டில் நிரைந்து காணப்படுவதால் தீயசெயல்கள் உருவாகாமலிருக்க நோன்பினை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று ஆண்டாள் நோன்பின் பயனை எடுத்துரைக்கின்றார் (Ramasubramaniyam, 2005).

வைணவ சமயக் கருத்துக்களை அனைவரும் அறியும்படி எளிமையாகவும், இனிமையாகவும் பாசுரங்களை ஆழ்வார்கள் பாடியுள்ளனர். சாதி, இனப் பாகுபாடின்றி சமயப் பணியை மக்களுக்கு எடுத்துரைப்பதில் முழு பங்காற்றியுள்ளனர். முதன்மையான பணியாக கருதினர். பன்னிரு ஆழ்வார்கள்

வரிசையில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவை முழுவதும் நோன்பை ஆதாரமாக கொண்டு, ஓங்கி உலகளந்த உத்தமனின் திருவடிகளை அடைவதற்கு வழிகாட்டுவதே பாவை பாடலின் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் உள்ளது. மார்கழி மாதத்தில் முழுநிலவாகிய பௌர்ணமி நாளில் பெண்கள் நோன்பு தொடங்குவது சிறப்பாகும். ஆண்டாள் உடல் தூய்மை, உள்ளத் தூய்மை செய்த பின்பே இறைவனை வழிபாடு செய்ய வேண்டும் என்றும், வைணவ சமயத்தில் திருமாலே உயர்ந்தவர் அவரை அடைவதற்காக நோன்பு நோற்பதும், நோன்பின் போது பெண்கள் அனைவரும் உடலை வருத்திக் கொண்டு பல்வேறு விதிகளைக் கடைபிடிக்க வேண்டும் எனவும், நோன்பினால் நமக்கு மட்டுமல்லாது உலகமக்களுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் ஆண்டாள் எடுத்துரைத்துள்ளார்.

## References

Manikanar, V.S., (2006) Thirukural Clarification, Manivasagar Pathippagam, Chennai, India

Pillai, K.S., (2011) Religion of Tamil people, Saradha PAthippaga, Chennai, India

Ramasubramaniyam, V.T., (2005) Thiruppavai, Thirumagal Nilayam, Chennai, India

Tholkappiyar, (2000) Tholkappiyam porulathikaram (Ilampuranar Urai), South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License